## இலங்கை மத்திய வங்கி

## வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

2020 மே 15 | வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை | 2020இன் 04ஆம் இலக்கம்

---

### உந்து ஊர்திகள் தொடர்பாக வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம்

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 46(1) மற்றும் 76ஜே (1) என்பனவற்றின் கீழ் வெளியிடப்பட்டது.

உந்து ஊர்திகளைக் கொள்வனவு செய்யும் அல்லது பயன்படுத்தும் நோக்கங்களுக்காக, இதனகத்துப் பின்னர் உரிமம்பெற்ற வங்கிகள் எனக் குறிப்பீடு செய்யப்படும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினாலும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினாலும் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகள் தொடர்பில் பெறுமதிக்கான கடன் விகிதத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கி பின்வரும் பணிப்புரைகளை விடுத்திருக்கிறது.

1. உந்து ஊர்திகள் தொடர்பில் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான 2019ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளின் பணிப்புரை 1(i) இனைப் பின்வரும் விடயங்கள் பதிலீடு செய்யும்.

    (i) உந்து ஊர்திகளின் கொள்வனவு அல்லது பயன்பாட்டு நோக்கங்களுக்காக உரிமம்பெற்ற வங்கிகளினால் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகள் அத்தகைய ஊர்திகளின் சந்தைப் பெறுமதியில் பின்வரும் சதவீதங்களை விஞ்சக்கூடாது.

        (அ) முதல் பதிவின் பின்னர் ஓராண்டிற்கும் குறைவான காலப்பகுதியில் இலங்கையில் பயன்படுத்தப்பட்ட பதிவுசெய்யப்பட்ட ஊர்திகள் மற்றும் பதிவுசெய்யப்படாத ஊர்திகள் தொடர்பில்;

**அட்டவணை 1 - பெறுமதிக்கான கடன் விகிதம்**

| ஊர்தி வகை | உந்து ஊர்திகள் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஊர்தி வகுப்பு | மின்னியல் ஊர்திகள் | ஏனையவை |
|---|---|---|---|
| வர்த்தக ஊர்திகள் | சி1, சி, சிஈ, டி1, டி, டிஈ, ஜி1, ஜி, ஜே | 90% | 90% |
| உந்து ஊர்திகள், கடுவழிப் பயண ஊர்திகள் (எஸ்யுவி) மற்றும் வான்கள் | பீ (இலகுபார வண்டிகள் மற்றும் ஒற்றைக் கூடார ஊர்திகள் தவிர) | 90% | 50% |
| உள்ளூரில் பொருத்தப்பட்ட உந்து ஊர்திகள், கடுவழிப்பயண ஊர்திகள் (எஸ்யூவி) மற்றும் வான்கள் | பீ (இலகுபார வண்டிகள் மற்றும் ஒற்றைக் கூடார ஊர்திகள் தவிர) | 90% | 70% |
| முச்சில்லு வண்டிகள் | பீ1 | 90% | 25% |
| இலகுபார வண்டிகள் | பீ | 90% | 90% |
| வேறு ஏதேனும் ஊர்திகள் | ஏ1, ஏ மற்றும் பீ இன் கீழ் வகைப்படுத்தப்பட்ட ஒற்றைக் கூடார ஊர்திகள் | 90% | 70% |
| கலப்பு உந்து ஊர்திகள் வான்கள் மற்றும் கடுவழிப் பயண ஊர்திகள் (எஸ்யூவி) | பீ (இலகுபார வண்டிகள் மற்றும் ஒற்றைக் கூடார ஊர்திகள் தவிர) | 50% | |

(ஆ) முதல் பதிவின் பின்னர் ஓராண்டிற்கும் கூடுதலான காலப்பகுதியில் இலங்கையில் பயன்படுத்தப்பட்ட பதிவுசெய்யப்பட்ட ஊர்திகள் தொடர்பில் 70 சதவீதம்.

2. சலுகை அடிப்படையிலான நியதிகள் மீதான உரிமத்தின் கீழ் உந்து ஊர்திகளின் இறக்குமதிக்காக அல்லது கொள்வனவிற்காக வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் உந்து ஊர்திகளின் சந்தைப் பெறுமதிக்குப் பதிலாக பாரம்பரிய முறைசார்ந்த விலைப்பட்டியல் பெறுமதியின் அடிப்படையில் கணிக்கப்படுதல் வேண்டும்.

3. உந்து ஊர்திகள் தொடர்பில் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் தொடர்பில் 2019.05.31ஆம் திகதியிடப்பட்ட 2019ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள், இப்பணிப்புரைகள் நடைமுறைக்குவரும் நாளிலிருந்து புறக்கீடு செய்யப்படும்.

பேராசிரியர் டபிள்யூ. டி. லக்ஷ்மன்
நாணயச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்